# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2110/53 - 2019 පෙබරවාරි මස 15 වැනි සිකුරාදා - 2019.02.15

*2110/53 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**அஞ்சல் திணைக்களம்**

அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டம்

***அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் (190 ஆவது அத்தியாயம்) 8(1) (ட) ஆம் பிரிவின் கீழ் அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சரால் விடுக்கப்படும் கட்டளை***

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்படும் இலவச அஞ்சல் வசதிக்கான முத்திரைப் பெறுமதியை அதிகரிப்பதற்கும் கௌரவ மாகாண சபை உறுப்பினர்களுக்காக வழங்கப்படும் இலவச அஞ்சல் வசதி ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கும் 2018.01.16 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையினால் இலக்கம் அமை/ 18/ 0017/ 743/ 001 இற்கு அமைய அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய,

1. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு வருடத்துக்கு வழங்கப்பட்டுள்ள இலவச அஞ்சல் வசதி ரூ. 1,75,000 வரையறையை ரூ. 3,50,000 வரை எனத் திருத்துதல்.

2. கௌரவ மாகாண சபை உறுப்பினர்களுடைய இலவச அஞ்சல் வசதிக்காக ஒரு வருடத்துக்கு வழங்கப்பட்டுள்ள ரூ. 24,000 வரையறையை ரூ. 48,000 வரை எனத் திருத்துதல்.

இந்தக் கட்டளை 2018.01.16 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

எம். எச். ஏ. ஹலீம்,
அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2019, சனவரி 09.*

*03-209*


1A - PG 4390 — 767 (2019/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.